"DINATHANI"

PAGE NO : 08

DATE : 25.07.21

# பல்கலைக்கழக கல்லூரிகளில் தேர்வுகள் ரத்து

## இறுதியாண்டு மாணவர்களுக்கு மட்டும் ஆன்லைன் தேர்வு

புதுச்சேரி, ஜூலை.25-
புதுச்சேரி பல்கலைக்கழக கல்லூரிகளில் தேர்வுகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இறுதியாண்டு மாணவர்களுக்கு மட்டும் ஆன்லைன் மூலம் தேர்வு நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தேர்வுகள் ரத்து

புதுவையில் கல்லூரி தேர்வுகள் அனைத்தும் ஆன்லைனில் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. தேர்வு எழுதும் மாணவர்கள் தேர்வு முடிந்தவுடன் அதை கல்லூரி முதல்வர்களுக்கு அனுப்ப வேண்டும் என்று பல்கலைக்கழகம் அறிவுறுத்தி இருந்தது.

முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான தேர்வுகள் நாளை முதல் நடைபெறுவதாக இருந்தது. இந்தநிலையில் இளங்கலை முதலாம், 2-ம் ஆண்டு தேர்வுகள் மற்றும் முதுகலை முதலாம் ஆண்டு தேர்வுகள் ரத்து செய்யப்பட்டுள்ளது. அகமதிப்பீட்டு முறையில் அவர்களுக்கான மதிப்பெண் வழங்கப்பட உள்ளது.

### ஆன்லைன் தேர்வு

இறுதியாண்டு மாணவர்களுக்கான தேர்வுகள் ஆன்லைன் வழியாக நடத்தப்படும். இதற்கான தேர்வு அட்டவணை விரைவில் வெளியிடப்பட உள்ளது. அனைத்து மாணவர்களும் தேர்வுக்கட்டணங்களை அட்டவணைப்படி செலுத்த வேண்டும்.

இதற்கான உத்தரவினை புதுவை பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாட்டாளர் லாசர் வெளியிட்டுள்ளார்.